சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2025 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மாசித் திங்கள் 17 ஆம் நாள்)

அசல் வழக்குஎண்.57/2023

CNR.No. TNCB1900002072023

1. திருமதி.மகாலட்சுமி

2. திருமதி. நாகரத்தினம்

.... வாதிகள்

-இடையே-

1. திரு.காந்தி சுப்பையன்

2. திருமதி.ரமாபிரபா

3. திருமதி.லட்சுமி பிரியா

4. திரு.பத்திரசாமி

5. திரு.வேலுசாமி

6. திரு. ஜம்புலிங்கம்

.... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு . ஆர்.சாந்தமூர்த்தி. அவர்கள் முன்னிலையாகியும், 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு . எம். ஹரிகிருஷ்ணன், அவர்கள் முன்னிலையாகியும் 2 முதல் 6 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. இவ்வழக்கானது தாவா சொத்துக்களை 3 சரிபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிகளுக்கும் கூட்டாக ஒதுக்கியும் கடந்த 30.06.2020 அன்று 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய எண் .4482/2020 தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றும் அதேபோல் கடந்த 04.02.2021 அன்று 1ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதி பெயரில் ஏற்படுத்திய எண் .4536/2021 தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கல்ல என்றும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் 1ம் பிரதிவாதி கடந்த 22.11.2016 ல் மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.190/2016 -ல் மோசடியாக பெறப்பட்ட தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை ஆகியவை செல்லத்தக்கவை அல்ல எனற பரிகாரமும் மேலும் வழக்கின் செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்குமாறும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

### 02. வழக்குரையின் சுருக்கம் :

இவ்வழக்கானது தாவா அயிட்ட 1 முதல் 3 சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் வாதிகளின் தந்தைவழி தாத்தாவும் ஆறுமுக கவுடர் அவர்களின் மகனுமான ராமசாமி கவுடருக்கு பாத்தியப்பட்டதாகும். ராமசாமி கவுடர் கடந்த 06.07.2022 ம் தேதிய 1382 (1972) பசலி ஆண்டுக்கான பழைய சிட்டாப்படி ஜடையம்பாளையம் கிராமத்தில் க.ச.188/1 காலையில் 2.67 ஏக்கர் பூமியும் க ..ச.192/2 காலையில் 1.45 ஏக்கர் பூமியும் பெற்றிருந்தார். ராமசாமி கவுடர் . அவரது மனைவி நஞ்சம்மாள் 2 மகன்களான கந்தசாமி மற்றும் காந்திசுப்பையன் , ஒரு மகளான ருக்குமணி மற்றும் மருமகன் ஈஸ்வர கவுடர் ஆகியோர் தங்களுக்கு கடந்த 03.10.1977 அன்று ஆவண எண்.1151/1977 கொண்ட ஒரு பாகப்பத்திரப்படி அவர்களது குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டனர்.

அதன்படி ராமசாமி கவுடருக்கும் அவர் மனைவி நஞ்சம்மாளுக்கும் க .ச.188/1 காலையில் மொத்தம் உள்ள 2.67 ஏக்கர் பூமியில் 0.60 செண்டும் க.ச.192/2 காலையில்

மொத்தம் உள்ள 1.45 ஏக்கரில் 0.50 செண்ட் பூமிகளும் " ஏ" அட்டவணைச் சொத்தாக ஒதுக்கீடு செய்யப்பட்டது . ராமசாமி கவுடருக்கு ஒதுக்கப்பட்ட "ஏ" அட்டவணைச் சொத்துக்கள் தான் இவ்வழக்கின் 1 மற்றும் 2 -ம் அயிட்டம் தாவா சொத்துக்கள் விவசாய பூமிகளாகும். 3-வது அயிட்ட தாவா சொத்து நத்தம் பூமியில் அமைந்துள்ள வீடு ஆகும் . நஞ்சம்மாள் கடந்த 1977 ம் ஆண்டிலும் ராமசாமி கவுடர் 1992 ம் ஆண்டிலும் காலமாகிவிட்டபடியால் அவர்களின் 2 மகன்களும் 1 மகளுமான கந்தசாமி, காந்தி சுப்பையன் மற்றும் ருக்மணி ஆகியோர் தாவாச்சொத்துக்களில் தலா 1/3 பங்கு உரிமையுடையவர்கள் ஆவார்கள். கந்தசாமிக்கு திருமக்காள் மற்றும் சாவித்திரி என்ற 2 மனைவிகள் இருந்தனர்.

1-ம் வாதியான மகாலட்சுமி திருமக்காள் என்பவருக்கு மகளாக பிறந்தார் . 2 ம் வாதி சாவித்திரி என்பவருக்கு மகளாக பிறந்தார். மேற்படி 2 மனைவிகளும் கந்தசாமி இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டனர் . 1, 2 வாதிகளின் தந்தை கந்தசாமி கடந்த 14.07.2022 அன்று 1, 2 வாதிகளை தாவா சொத்துக்களில் அவருக்குப் பாத்தியப்பட்ட 1/3 பங்கிற்கு வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டார் . அதனால் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 1/3 பங்கு கூட்டாக உரிமை உள்ளது. ருக்மணி மற்றும் அவருடைய கணவர் ஈஸ்வர கவுடர் அவர்களுக்கு தாவா சொத்துக்களில் பாத்தியப்பட்ட 1/3 பங்கிற்கு அவர்களின் 3 மகன்களாகிய 4 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு காலஞ்சென்று விட்டனர்.

ராமசாமி கவுடர் மற்றும் நஞ்சம்மாள் விட்டுச்சென்ற கூட்டுக்குடும்ப சொத்துக்களை வாதிகளும், 1 ம் பிரதிவாதி மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் கூட்டாக அடைந்து கூட்டு அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் . வாதிகளின் தந்தை கந்தசாமி இறந்த பிறகு வாதிகள் , 1 ம் பிரதிவாதியாகிய காந்திசுப்பையனை பலமுறை அணுகி சுமுகமான பாகப்பிரிவினை வேண்டி கேட்டுக்கொண்ட போதும் அவர் ஏதாவது சாக்குப் போக்கு சொல்லி தவிர்த்து வந்தார். இந்நிலையில் 12.01.2023 ம் தேதி தாவா சொத்து பற்றிய வில்லங்க சான்றிதழை வாதிகள் பெற்று பார்த்தபோது வாதிகள் அதிர்ச்சி அடைந்துள்ளார்கள் . கடந்த 30.06.2020 அன்று 1ம் பிரதிவாதி காந்திசுப்பையன் 2 ம் பிரதிவாதியான மகள் ரமாபிரபாவுக்கு ஆவண எண் .4482/2020 கொண்ட ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதிகளுக்கு தெரியாமல் தாவா

சொத்தில் வாதிகளுக்கு உள்ள உரிமைக்கு எதிராக தாவா 1 மற்றும் 2 அயிட்டச் சொத்துக்களில் ஒரு பகுதியைப் பொறுத்து உருவாக்கியுள்ளார் என்பது தெரியந்தது.

ஆனால் இன்றுவரை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மேற்படி விவரத்தை வெளியே சொல்லவும் இல்லை. 2 ம் பிரதிவாதியும் மேற்படி உருவாக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி சுவாதீனமும் எடுக்கவில்லை . மேற்படி பத்திரமானது நடைமுறைப்படுத்தப்படவில்லை. கடந்த 04.02.2021 அன்று 1ம் பிரதிவாதி காந்திசுப்பையன் 3-ம் பிரதிவாதியான இன்னொரு மகள் லட்சுமிபிரியாவுக்கு ஆவண எண்.4536/2021 கொண்ட ஒரு தான செட்டில்மெண்ட் பத்திரத்தை வாதிகளுக்கு தெரியாமல் தாவா சொத்தில் வாதிகளுக்கு உள்ள உரிமைக்கு எதிராக தாவா 1 மற்றும் 2 அயிட்டச் சொத்துக்களில் ஒரு பகுதியை பொறுத்து உருவாக்கியுள்ளார் என்ற விபரம் தெரியவந்தது. ஆனால் இன்றுவரை 1 மற்றும் 3 பிரதிவாதிகள் மேற்படி விவரத்தை வெளியே சொல்லவும் இல்லை . 3 ம் பிரதிவாதியும் மேற்படி உருவாக்கப்பட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி சுவாதீனமும் எடுக்கவில்லை . மேற்படி பத்திரமானது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மேற்படி சட்டவிரோதமான தான செட்டில்மெண்ட் பத்திரங்களில் கூறியுள்ள வாசகங்களைப் பார்க்கும்பொழுது வாதிகளிடம் 1ம் பிரதிவாதி தனது தாயார் நஞ்சம்மாள் கடந்த 05.10.1977 அன்று 1ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு பதிவு செய்யப்படாத உயில்சாசனம் இருப்பதுபோல் ஒன்றை உருவாக்கியுள்ளார் என்றும் அதேபோல் 1ம் பிரதிவாதியின் தந்தை ராமசாமி கவுடர் கடந்த 07.03.1990 அன்று 1ம் பிரதிவாதியின் பெயருக்கு ஒரு பதிவு செய்யப்படாத உயில்சாசனம் இருப்பதுபோல் ஒன்றை உருவாக்கியுள்ளார் என்பதும் தெரியவந்தது . கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக 1-ம் பிரதிவாதி மேற்கண்ட 2 உயில்களைப் பற்றி யாரிடமும் எதுவும் இன்றுவரை கூறவில்லை. எனவே மேற்கண்ட 2 பதிவு செய்யப்படாத உயில்கள் வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது . அவைகளை வாதிகள் முற்றிலும் மறுக்கின்றார்கள்.

மேற்கண்ட 2 உயில்களை வாதிகளின் தாத்தா பாட்டி எழுதிவைத்திருப்பதாக ஆவணங்கள் உள்ளபோதிலும் ,அவைகள்தாவா சொத்துக்களை சட்ட விரோதமாக

அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 1ம் பிரதிவாதி உருவாக்கி இருக்கிறார். அந்த ஆவணங்கள் ஒருபோதும் சட்ட ரீதியான ஆவணங்கள் அல்ல . மோசடியான உருவாக்கப்பட்டவைகள்ஆகும். உண்மையில் ராமசாமி கவுடரும் நஞ்சம்மாளும் தங்கள் மகன்கள் மற்றும் மகள் மீது சரிசமமான அன்பும் பாசமும் கொண்டிருந்தார்கள். அவர்கள் எந்த காலத்திலும் மேற்கூறியவாறு உயில்கள் எதுவும் எழுதிவைக்கவில்லை.

உண்மையில் 1ம் பிரதிவாதி அவருடைய இன்னொரு மகளும் பி . எஸ்.தேவனாதன் மனைவியுமான டி.எஸ். சங்கீதா என்பவர் மீது அசல் வழக்கு எண்.190/2016 என்ற வழக்கினை கூட்டுச்சதி செய்து 22.11.2016 ல் தாக்கல் செய்து அதன் மூலம் மேற்படி சட்டவிரோதமாக உருவாக்கப்பட்ட 2 உயில்களையும் செல்லத்தக்கது என்ற ஒரு விளம்புகை பரிகாரத் தீர்ப்பாணை பெற்றுள்ளார் .அந்த வழக்கில் சங்கீதாவும் கூட்டுச்சதி செய்து அவரது ஒப்புதலை தெரிவித்துள்ளார் . அந்த வழக்கானது 1ம் வாதி மற்றும் அவரின் மகளான சங்கீதாவும் சேர்ந்து சட்டத்திற்குப் புறம்பாகவும் சட்டத்தை தவறாகப்பயன்படுத்தி பெறப்பட்ட தீர்ப்பாணையாகும்,ஆகவே வாதிகளால் பாகப்பிரிவினை, விளம்புகை பரிகாரம் மற்றும் இதர பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளை 11.04.2023 தேதியில் அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

வாதிகள் தரப்பில் 2-ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டும் சான்றாவணங்கள் வா.சா. ஆ 1 முதல் வா.சா. ஆ .12 வரையும் மேலும் கூடுதல் வாக்குமூலம் தாக்கல் செய்து வா .சா.ஆ 13 மற்றும் வா .சா. ஆ.14 சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

03. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவென்றால் இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

04. <u>தீர்வு:</u>

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து வாதிகளின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

05. வாதி தனது வழக்கை நிரூபிக்கும் வகையில் வாதி வா .சா. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா,.1ன் சாட்சிய சங்கதி என்னவென்றால் 1-ம் வாதியான மகாலட்சுமி திருமக்காள் என்பவருக்கு மகளாக பிறந்ததாகவும் 2ம் வாதி சாவித்திரி என்பவருக்கு மகளாக பிறந்ததாகவும் மேற்படி 2 மனைவிகளும் கந்தசாமி இறப்பதற்கு முன்பே காலமாகிவிட்டதாகவும் 1,2 வாதிகளின் தந்தை கந்தசாமி கடந்த 14.07.2022 அன்று 1,2 வாதிகளை தாவா சொத்துக்களில் அவருக்குப் பாத்தியப்பட்ட 1/3 பங்கிற்கு வாரிசுகளாக விட்டு விட்டு இறந்து விட்டதாகவும் அதனால் வாதிகளுக்கு தாவா சொத்துக்களில் 1/3 பங்கு கூட்டாக உரிமை உள்ளதாகவும் ருக்மணி மற்றும் அவருடைய கணவர் ஈஸ்வர கவுடர் அவர்களுக்கு தாவா சொத்துக்களில் பாத்தியப்பட்ட 1/3 பங்கிற்கு அவர்களின் 3 மகன்களாகிய 4 முதல் 6 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு காலஞ்சென்று விட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்படி சட்டவிரோதமான தான செட்டில்மெண்ட் பத்திரங்களில் கூறியுள்ள வாசகங்களைப் பார்க்கும்பொழுது வாதிகளிடம் 1ம் பிரதிவாதி தனது தாயார் நஞ்சம்மாள் கடந்த 05.10.1977 அன்று 1ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு பதிவு செய்யப்படாத உயில்சாசனம் இருப்பதுபோல் ஒன்றை உருவாக்கியுள்ளதாகவும் அதேபோல் 1ம் பிரதிவாதியின் தந்தை ராமசாமி கவுடர் கடந்த 07.03.1990 அன்று 1ம் பிரதிவாதியின் பெயருக்கு ஒரு பதிவு செய்யப்படாத உயில்சாசனம் இருப்பதுபோல் ஒன்றை உருவாக்கியுள்ளதாகவும் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக 1-ம் பிரதிவாதி மேற்கண்ட 2 உயில்களைப் பற்றி யாரிடமும் எதுவும் இன்றுவரை கூறவில்லை . என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேற்கண்ட 2 உயில்களை வாதிகளின் தாத்தா பாட்டி எழுதிவைத்திருப்பதாக ஆவணங்கள் உள்ளபோதிலும் ,அவைகள்தாவா சொத்துக்களை சட்ட விரோதமாக

அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் 1ம் பிரதிவாதி உருவாக்கி இருக்கிறார். அந்த ஆவணங்கள் ஒருபோதும் சட்ட ரீதியான ஆவணங்கள் அல்ல . மோசடியான உருவாக்கப்பட்டவைகள் ஆகும். உண்மையில் ராமசாமி கவுடரும் நஞ்சம்மாளும் தங்கள் மகன்கள் மற்றும் மகள் மீது சரிசமமான அன்பும் பாசமும் கொண்டிருந்தார்கள். அவர்கள் எந்த காலத்திலும் மேற்கூறியவாறு உயில்கள் எதுவும் எழுதிவைக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் இந்த வழக்கில் ராமசாமி கவுடர் என்பவருக்கு கந்தசாமி கவுடர் , காந்தி சுப்பையன் மற்றும் ருக்குமணி ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் ஆவார்கள் . மேற்கண்ட ராமசாமி கவுடரின் சொத்தை பொறுத்து அவரது வாரிசுதாரர்களுக்கு 3-ல் ஒரு பாகம் கிடைக்கத்தக்கது. இந்நிலையில் வாதிகள் மேற்கண்ட ராமசாமி கவுடரின் வாரிசான கந்தசாமி என்பவரின் வாரிசுகள் என்பதால் மேற்கண்ட வாதிகள் 3-ல் ஒரு பாகம் தாவா சொத்தில் கிடைக்கத்ததென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

இவ்வழக்கில் தாவா சொத்தில் வாதிகளுக்கு 3-ல் ஒரு பாகம் கிடைக்கத் தக்கதென இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால் அந்த சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லத்தக்கவை அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

மேலும் கூடுதல் முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதியின் பெயருக்கு ராமசாமி கவுடர் எழுதி வைத்த உயில் செல்லத்தக்கதென தேவனாதன் மனைவியான சங்கீதாவுக்கு எதிரான மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் .190/2016 என்ற வழக்கு தாக்கல் செய்து இந்த வழக்கினை சங்கீதா ஒப்புக்கொண்டதால் அதன் அடிப்படையில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பாணை வா.சா. ஆ 14 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட அசல் வழக்கு எண் .190/2016 ல் கண்ட உயிலை நிரூபணம் செய்யாமல் அந்த வழக்கின் பிரதிவாதி ஒப்புக்கொண்டதன்பேரில் அந்த உயிலானது செல்லத்தக்கதென தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை எனவே மேற்கண்ட மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் . 190/2016 என்ற வழக்கு

செல்லத்தக்கவை அல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மேலும் மேற்படி வா.சா. 1 ன் சாட்சியமும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா.ஆ 1 முதல் வா.சா.ஆ.14 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்பதால் வழக்குரை சங்கதிகளிலிருந்து பிரதிவாதிகள் உட்கிடையாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பது மட்டுமில்லாமல் வாதிகள் தன் தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்து வாதிகளின் வழக்கை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

06. முடிவாக,

1. தாவா வழக்கு அனுமதிக்கப்பட்டு தாவா சொத்துக்களை பொறுத்து 3 சரிசமபாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிகளுக்கு கூட்டாக ஒதுக்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. மேட்டுப்பாளையம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.190/2016 -ல் கடந்த 22.11.2016 அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை இல்லாநிலையது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. 1 ம் பிரதிவாதி 2 ம் பிரதிவாதியின் பெயருக்கு கடந்த 30.06.2020 அன்று இயற்றி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவண எண்.4482/2020 ஆனது இல்லாநிலையது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

4. 1 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதியின் பெயருக்கு கடந்த 04.02.2021 அன்று இயற்றி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவண எண்.4536/2021 ஆனது இல்லாநிலையது என விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

5. இருதரப்பின் உறவுமுறையை கருத்தில்கொண்டு வழக்கின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 01 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,

வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 03.10.1977 | பாகப்பிரிவினை பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 06.07.2012 | சிட்டா | உண்மை நகல் |
| வா.சா.ஆ.3 | 25.07.2022 | கந்தசாமியின் இறப்பு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 22.09.2022 | கந்தசாமியின் வாரிசு சான்றிதழ் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 31.01.2023 | ராமசாமி கவுடர் பெயரிலுள்ள பட்டா எண்.766 | இணையதள நகல் |
| வா.சா.ஆ.6 | 22.12.2020 | கூட்டுப்பட்டா எண்.1221 | இணையதள நகல் |
| வா.சா.ஆ.7 | 17.10.2022 | கூட்டுப்பட்டா எண்.2866 | இணையதள நகல் |
| வா.சா.ஆ.8 | 31.01.2023 | புல வரைபடம் | இணையதள நகல் |

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.9 | 03.02.2023 | புல வரைபடம் | இணையதள நகல் |
| வா.சா.ஆ.10 | 30.06.2020 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.11 | 04.02.2021 | தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.12 | 12.01.2023 | வில்லங்க சான்று | இணையதள நகல் |
| வா.சா.ஆ.13 | 22.11.2016 | மேட்டுப்பாளையம் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.190/2016 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.14 | 22.11.2016 | மேட்டுப்பாளையம் குற்றவியல் மற்றும் உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.190/2016 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை | சான்றிட்ட நகல் |

## சாட்சிகள் பட்டியல்

| வாதிகள் தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|
| வா.சா.1. திருமதி. நாகரத்தினம் | --இல்லை-- |

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,